# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 19, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 செப்டம்பர் 4, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வரும் சேர்வது நாடு."*

*குறையாத விளைபொருளும், தக்க அறிஞரும், கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.*

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 40,* திரு. *இரா. வில்லவநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**40–**

#### தொழில்நுட்பப் பயிலகம்

***115–திரு. இரா. வில்லவநாதன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–*

*வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் தொழில்நுட்பப் பயிலகம் தொடங்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நேற்று இந்த அவையிலே நான் குறிப்பிட்டதுபோல, மீண்டும் இந்த அவையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்

தெரிவித்துக்கொள்வது, இந்த ஆண்டு அரசானது எந்தத் தொழில்நுட்பக் கல்வி நிலையத்தையும் ஆரம்பிக்கின்ற நிலையில் இல்லை. நிதிநிலையைப் பொறுத்து அடுத்த ஆண்டு பரிசீலனை செய்யப்படும்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் தேர்வுநிலைப் பேரூராட்சியிலிருந்து ஒரு தொழில்நுட்பக் கல்லூரிக்கோ அல்லது அரசுக் கல்லூரிக்கோ செல்வது என்று சொன்னால், 30 கிலோமீட்டர் தொலைவிலுள்ள காஞ்சிபுரத்திற்கோ அல்லது 45 கிலோமீட்டர் தொலைவிலுள்ள வேலூர் நகருக்கோதான் சென்று பயிலவேண்டிய ஒரு நிலை உள்ளது. காவேரிப்பாக்கம் தேர்வுநிலைப் பேரூராட்சியைப் பொறுத்தமட்டிலே அங்கு விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் கிடையாது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு, வருகின்ற நிதியாண்டில் இதை எடுத்துக்கொள்ள முன்வருமா என்பதைக் கேட்கவிருந்தேன். அமைச்சரவர்கள் அதற்கு முன்கூட்டியே பதிலைச் சொல்லிவிட்ட காரணத்தினால், அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வில்வநாதன் அவர்கள் சொல்லியதற்காகவும், இந்த ஆண்டு இதனைச் செயல்படுத்த அவர் மீண்டும் வற்புறுத்தாததன் காரணமாகவும் நான் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 41, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**41–**

**நிலவள வங்கி**

***2142–திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பாப்பிரெட்டிபட்டி வட்டத் தலைமையிடத்தில் நிலவள வங்கி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?